## மூவொரு இறைவன் திருநாள்

வெளி 34:4-6, 8-9; 2

கொரி 13:11-13;

யோவான் 3:16-18

திருப்பலிக்கான மையக் கருத்து: “

நான் மட்டும்” என்ற தனிமையிலிருந்து, “நான் – நீ” என்ற அன்பின் இணைப்பான தந்தை மகன் தூய ஆவியின் உறவுக்குள் இணைய அழைப்பு.

## திருப்பலி முன்னுரை

ஒரு பழைய கதையுடன் கூடிய நிகழ்வு

ஒரு அனுபவம் மிகுந்த சிறந்த கட்டிட நிபுணர் ஒருவரிடம் ஒரு ஆழமான பள்ளத்தாக்கைக் கடக்க உதவும் பெரிய பாலம் ஒன்று கட்டித்தர பணிக்கப்பட்டார் பாலம் கட்டும் வேலை தொடங்கும் நாளில், தொழிலாளர்கள் அனைவரும் விரைவாக கூடி வந்து தயார் நிலையில் இருந்தனர். சிலர் அளவுகளை எடுத்தனர், சிலர் கருவிகளை தயார் செய்தனர் மற்றவர்கள் கட்டுமான திட்டங்களைப் பற்றி தங்களுக்குள் விவாதித்தனர்

ஆனால் அந்த தலைமை கட்டி நிபுணர் மட்டும் நீண்ட நேரம் அமைதியாக எதையோ யோசனை செய்து கொண்டு நின்றுகொண்டிருந்தார்.ஒரு தொழிலாளர் கேட்டார்:“ஏன் நாம் இன்னும் மணியை ஆரம்பிக்கவில்லை?”

கட்டட நிபுனர் பதிலளித்தார்.

நாம் இன்னும் “இந்தப் பாலத்தை யாருக்காக யார் நினைவாக கட்டுகிறோம் என்பதை நாம் இன்னும் நினைவுகூரவில்லை. அதை மறந்துவிட்டு நாம் ஒரு வலுவான பாலத்தை கட்டலாம்– ஆனால் அர்த்தமுள்ள ஒன்றை அல்ல.”

அதன்பின் அவர் தலை குனிந்து ஒரு சிறிய ஜெபம் செய்து, முதல் கல்லை வைத்தார்.அந்த ஒரு சிறிய இடைவேளையே எல்லாவற்றையும் மாற்றியது. வேலை இனி சாதாரண கட்டுமான பணி அல்ல அது ஒரு நோக்கத்திற்கானது

ஒரு அர்த்தத்தை தரக்கூடியது

அது ஒரு பணி வாழ்வு

நாமும் இன்று வழக்கம்போல் சிலுவை அடையாளத்துடன் திருப்பலியை ஆரம்பித்திருக்கலாம். ஆனால் அந்த எளிய செயலில்தான் நம்முடைய முழு விசுவாசத்தின் ரகசியம் அடங்கியுள்ளது.

தந்தையின் மூலம் நாம் நம்மை படைத்தவரை வானம், பூமி, செடி கொடிகள் விலங்குகள், மனிதர்கள் என எல்லாவற்றையும்

படைத்தவரை கான்கிறோம் மகனில், நம்முடைய சகோதரனை சகோதரிகளை

பாவத்தைத் தவிர, எல்லாவற்றிலும் நம்மைப்போல மனித வாழ்க்கையை வாழ்ந்தவரைகான்கிறோம் பரிசுத்த ஆவியில், இறைவனின் மூச்சையும் ஆறுதலரையும் வரவேற்கிறோம்– அவர் தந்தையாக மகனாக செய்த எல்லாவற்றையும் நினைவுபடுத்தி, நம்மை முழு விசுவாசத்திற்குள் நடத்துகிறார்.

இன்று நாம் மூவொரு இறைவன் என்ற மறையாத ரகசியத்தை ஆழமாக சிந்திக்கிறோம்:

ஒரே தேவன் நம்மை விட்டு தொலைவில் இருப்பவர் அல்ல, நமக்கு நெருக்கமானவர்;தனியாக இருப்பவர் அல்ல, உறவில் ஒன்றிப்பை தருபவர் மௌனமாக இருப்பவர் அல்ல, அன்பாகப் பேசும், தன்மை கொண்டவர் நம்மை உறவுக்குள் அழைக்கும்

இணையில்லா இறைவன்

நாம் பல நேரங்களில் “நான் மட்டும்” என்று வாழ்ந்திருக்கிறோம்.நமது வாழ்க்கை இறைவனுடைய மூவொரு நாமத்தில் ஆரம்பித்து, அதிலேயே முடிகிறது என்பதை மறந்திருக்கிறோம்.அந்த தவறுகளுக்காக நாம் இப்போது மனந்திரும்பி, தேவனிடத்தில் மன்னிப்பை கேட்டு திருப்பலியின் மூலம் ஒன்றிணைந்து ஜெபிப்போம்

## திருப்பலி மறையுறை

ஒரு பயணி தான் பயணம் மேற்கொள்ளும் போது சந்தித்த ஒரு அமைதியான கிராமத்தின் எல்லையில் வாழ்ந்து வந்த ஒரு வயதான விவசாயியைப் பற்றிய ஒரு கதையைச் சொன்னார்.

ஒவ்வொரு நாள் காலையிலும், சூரியன் உதிக்கும் முன்பே, அந்த விவசாயி தனது வயல்வெளிக்கு வந்து, தனது தொப்பியை கழற்றி வைத்து, சுருக்கமாக ஜெபிப்பார் “தேவனுடைய நாமத்தில்” என்று ஆரம்பித்து தினமும் ஜெபிப்பார்

அதன் பிறகே அவர் தனது அன்றாட வேலையைத் தொடங்குவார்.

ஒரு நாள் அந்த கிராமத்தை கடந்து செல்லும் பயணி கேட்டார்:“ஏன் நீங்கள் ஒவ்வொரு நாள் காலையிலும் தேவனுடைய நாமத்தில் என்று சொல்கிறீர்கள்?”என்று கேட்டார்

விவசாயி சிரித்துக் கொண்டு பதிலளித்தார்:“இந்த வயல் என்னுடையது மட்டும் அல்ல, இந்த நாள் என்னுடையது மட்டும் அல்ல, என் சக்தியும் என்னுடையது மட்டும் அல்ல. நான் தேவனுடைய நாமத்தில் ஆரம்பிப்பதால் நான் வாழும் இந்த

வாழ்க்கை யாருடையது என்பதை நினைவில் வைத்துக்கொள்கிறேன்." என்றார்

அந்த எளிய வார்த்தைதான் "தேவனுடைய நாமத்தில்" –என்று ஆரம்பிப்பதுதான் நம்முடைய தொடக்கமும் முடிவும் ஆகும்.

நாம் ஒவ்வொரு முறை கூடி ஜெபிக்கும் போதும் இதே வார்த்தைகளில்தான் தொடங்குகிறோம்:

"தந்தையுன் பெயராலும் மகனின் பெயராலும் பரிசுத்த ஆவியின் பெயராலும்

என்பதை நாம் அடிக்கடி சொல்லுவதால், அது ஒரு வழக்கமான செயல் போல தோன்றலாம். ஆனால் இந்த சில வார்த்தைகளில்தான் நம் விசுவாசத்தின் மிகப் பெரிய மறைபொருள் உள்ளது அதுவே மூவொரு இறைவனின் இரகசியம்.

ஒரு இளைஞரான குருத்துவ மாணவர் ஒரு சுவாரஸ்யமான அனுபவத்தைப் பகிர்ந்தார். ஒரு குரு மடத்தில் மூன்று வயதான துறவிகளுடன் அவர் உணவருந்தினார். அவர்கள் மிகவும் ஆர்வமாகப் பேசிக்கொண்டிருந்தனர். ஆனால் சில நேரத்தில், அந்த குழு மாணவர் அந்த துறவிகளை கவனித்தார்– ஒவ்வொருவரும் வேறு வேறு விஷயங்களைப் பற்றி பேசிக்கொண்டிருந்தார்கள்! ஆனாலும் ஒவ்வொருவரும் தங்களை மற்றவர்கள் புரிந்துகொள்கிறார்கள் என்று நினைத்தனர்!

பின்னர் அந்த துறவிகள் தங்கள் தவசஉணர்ந்து சிரித்தனர்.

அதேபோல நாமும் பல நேரங்களில் "இறைவன் என்ற ஒரே வார்த்தையைப் பயன்படுத்துகிறோம். ஆனால் நாம் உண்மையில் என்ன அர்த்தப்படுத்துகிறோம்? அவரை முழுமையாகப் புரிந்துகொள்ள முயற்ச்சிக்கிறோமா?

ஒரு சிறுவன் ஒரு இறையியல் ஆசிரியரிடம் கேட்டான்:"ஒரே தேவன் மூன்று பேராகவும், ஒரே நேரத்தில் ஒருவராகவும் எப்படி இருக்க முடியும்?"

ஆசிரியரால் பல விளக்கங்கள் கூறப்பட்டபின், ஆசிரியர் இறுதியில் சொன்னார்:"இது ஒரு மறைபொருள்

அது உண்மையான பதில்.ஏனெனில் நாம் இறைவனை முழுமையாகப் புரிந்துகொள்ள முடிந்தால், அவர் இறைவனாக இருக்க முடியாது

புனித அகுஷ்தினீர் இதை நன்றாகப் புரிந்து வைத்திருந்தார்

கடற்கரையில் நடந்து கொண்டிருந்தபோது, ஒரு சிறுவன் கடல் நீரை ஒரு சிறிய குழியில் ஊற்றி நிரம்ப முயன்றதை புனித

அகுஸ்தினார் பார்த்தார்.அவர் சொன்னார்: "அது சாத்தியமில்லை."என்று!

ஆனால் அந்த புத்திசாலி சிறுவன் பதிலளித்தான்: "அப்படியே, இறைவனை உங்கள் சிந்தனையில் அடக்க முயற்சிப்பதும் சாத்தியமில்லை."என்றான்

நாம் அந்தச் சிறுவனைப் போன்றவர்கள். கடலை ஒரு குடுவையில் அடக்க முடியாது. அது போல கடவையே படைத்த இறைவனையும் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது.

ஆனால் அதில் உள்ள அழகான உண்மை என்னவென்றால்—நாம் இறைவனால் இருளில் விடப்படவில்லை.

இறைவன் நமக்குச் அருகில் இருக்கிறார் வந்திருக்கிறார்.

ஒரு வயதான மனிதர் தனது பிள்ளைகளிடமிருந்து வாரா வாரம் வரும் கடிதங்களைப் தவறாமல் படித்து சேகரித்து வந்தார் அவை எளிய வார்த்தைகளாக இருந்தன ஆனால் முற்றிலும் அன்பு நிறைந்த வார்த்தைகள்

அப்படியே இறைவன் தனது மகனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் நம்மிடம் பேசுகிறார்.யேசு கிறிஸ்துவின் மூலம் இறைவன் இயேசு தன்னை வெளிப்படுத்துகிறார்.

இயேசு எப்படிப்பட்ட இறைவன்

அவர் தொலைவில் இருக்கும் சக்தி அல்ல.தனிமையில் இருக்கும் அதிகாரம் அல்ல.ஆனால் அவர் அன்பின் ஒன்றிப்பை வழங்கக்கூடிய

தந்தை மகன்

பரிசுத்த ஆவி.

தந்தை மகன் பரிசுத்த ஆவியின் மறை உண்மையை விளக்குவதற்கான எளிய வழி—வரையறைகள் அல்ல, அனுபவம்.

கண்ணுக்குத் தெரியாத காற்றைப் பற்றி நினைத்துப் பாருங்கள். காற்றை நாம் பார்க்க முடியாது. ஆனால் கண்ணுக்குத் தெரியாத காற்றினாரல் ஏற்படும் விளைவுகளை நாம் உணர முடிகிறது மரங்கள் அசைவது, இலைகள் சலசலப்பது, குளிர்ந்த தென்றல் முகத்தில் படுவது

அதேபோலவே இறைவனும்.

தந்தையாக – நமக்கு உயிர் கொடுப்பவர்

மகனாக நம்மோடு நடக்கும் ஒருவர்

பரிசுத்த ஆவியாக – நமக்குள் வாழ்ந்து ஆற்றல் தருபவர்

ஒரு சிறுவன் இரவின் இருட்டுக்குப் பயந்து விழித்திருந்தான். அப்போது அவன் தந்தை வந்து அவன் அருகில் அமர்ந்து சொன்னார்:“நான் இங்கே இருக்கிறேன்.” என்று!

தந்தை அருகில் இருந்தாலும் இருள் போகவில்லை. ஆனால் பயம் போய்விட்டது.

அதுவே தந்தையை நம்புவதின் அர்த்தம்.

யேசுவில், இறைவன் நம்மோடு இருக்கிறார்.

எம்மாவூஸ் வழியில் நடந்த சீடர்களைப் போல, நாம் அவரை அடையாளம் காணாமல் இருக்கலாம். ஆனால் அவர் நம்மோடு நடக்கிறார்.

பரிசுத்த ஆவி–அவர் எப்போதும் நமக்குள் இருக்கிறார்.

ஒரு சிறிய பங்கு தளத்தில் சண்டை சச்சரவுகள் மனச்சோர்வு கருத்து வேறுபாடுகள் இருந்தது. பங்கின் மக்கள் பல குழுக்களாக பிரிந்து நின்றனர் பின்னர் அதில் ஒரு சிலர் ஒன்றாக சேர்ந்து ஜெபிக்கத் தொடங்கினர், மன்னிக்கத் தொடங்கினர். மெதுவாக மாற்றம் ஏற்பட்டது

புதிய ஆனந்தம்,

புதிய வாழ்வு.

அதுவே தூய ஆவியின் அமைதியான செயல்பாடு

ஆனால் நாம் அனைவரும் இன்னொரு மூவொரு கடவுளை பின்பற்றுகிறோம்

அது

“நானே இப்போது எல்லாம் “

ஒரு வியாபாரி சொன்னார்:“நான் அனைத்தையும் சம்பாதித்தேன் ஆனால் அவற்றை பகிர யாரும் இல்லை.”

அது இறைவனுக்கு எதிரான வாழ்க்கை.

இறைவன் தனிமையானவர்

அல்ல அவர் உறவுகளின் சங்கமம்

இறைவன் சுயநலம் இல்லாத தன்னையே அர்ப்பணிக்கும் அன்பு கொண்டவர்

தொடக்க கால கிறிஸ்தவர்கள் மூவொரு இறைவனின் செயல் பாட்டை ஒரு “தெய்வீக நடனம்” என்று நினைத்தார்கள்

தந்தை மகன் தூயாஆவி ஆகியோர் அன்பில் ஒன்றிணைந்த இயக்கம்.

அந்த தெய்வீக நடனம் நமக்காக எப்போதும் திறந்திருக்கும் இயக்கமாக அது நம்மை அழைக்கிறது.

இதனால் மூவொரு இறைவன் என்பது ஒரு கொள்கை மட்டும் அல்ல அது ஒரு வாழ்வு.

ஒரு தாய் தனது நோயுற்ற குழந்தைக்காக இரவு முழுவதும் விழித்திருப்பதை நினைத்துப் பாருங்கள். எந்தப் பலனும் இல்லை. ஆனாலும் அது தந்தையை போன்ற அன்பின் வாழ்வு.

பல ஆண்டுகள் பேசாத இரண்டு நண்பர்கள் பின்னர் தவறை உணர்ந்து இணைந்து வேலை செய்து, இறுதியில் "நாம் சகோதரர்கள் " என்று சொல்லி இணைந்து பயணிப்பதை நினைத்துப் பாருங்கள்.

இது மூவொரு இறைவனின் செயலால் சாத்தியமானது

நாம் தினமும் நம் நெற்றுயை தொடுகிறோம்

நம்மை அறியாமல்

ஆனால் சிலுவை அடையாளத்தால்.

ஒரு தாய் தனது குழந்தையின் நெற்றியில் தினமும் சிலுவை வரைகிறாள் அந்தக் குழந்தைக்கு சிலுவையின் தத்துவம் தெரியாது. ஆனால் அவன் அறிந்தது ஒன்றே ஒன்றுதான் அது நான் நேசிக்கப்படுகிறேன். நான் பாதுகாப்பாக இருக்கிறேன்."கன்பதுதான்.

இறுதியாக

ஒரு வயதான பெண்மணி ஒவ்வொரு மாலையும் வானத்தை நோக்கி, எம் தேவனே உம்மை நான் தினமும் புகழ்கிறேன்" என்று ஜெபித்தாள்

அதை தினமும் கேட்டு கொண்டிருந்த ஒருவர் முதியவர் கேட்டார்நீங்கள் இறைவனை முழுமையாகப் புரிந்து கொண்டுள்ளீர்களா என்று கேட்டார்

அந்த வயதான பெண்மணி சிரித்துக கொண்டே சொன்னார்:"இல்லை. ஆனால் அவருடைய அன்பை அனுபவித்திருக்கிறேன்.இன்றும் அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்

இதைவே இன்றைய திருநாளின் மையம்.

நாம் அனைத்து மறை உண்மையையும் புரிந்துகொள்ள வேண்டியதில்லை. இந்த மறை உண்மையை தீர்க்க வேண்டியதில்லை. அதோடு வாழவேண்டும்.

ஆகையால், தினமும் காலையில் அந்த  விவசாயியைப் போல நாமும் தினமும் சொல்ல முயற்ச்சிப்போம் இறைவனின் நாமத்தால் அனைத்தும் கூடும் .

ஏனெனில் மூவொரு இறைவன் என்ற மறை உண்மை ஒரு பிரச்சினை அல்ல,அது இறை அன்பின் வாழ்க்கை.

எனவே தந்தையின் பெயராலும் மகனின் பெயராலும் தூய ஆவியின் பெயராலும்  உங்களுக்கு நீடித்த சமாதானம் கிடைக்கட்டும்

ஆமென்.

Prepared by: **Fr. Paul Julian,** Perth ,Australia

and Translated by: **Leonard Arulandhu,** Holy Family Church, Chennai